මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/25/2024
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.12.04

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை: 03/2024 –(i)**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச நிறுவனங்கள் / பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு /நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**2024.11.25 ஆந் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி பணிகள் ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களின் எதிர்காலச் செயல்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு, 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட முறைமையினைப் பயன்படுத்தல்**

தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 03/2024 தொடர்பாக

02. 2024.11.25 ஆந் திகதிய 2412/08 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் 24 புதிய அமைச்சுக்களின் கீழ் அரசாங்கத்தின் விடயதானங்கள் மற்றும் செயற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 03/2024 வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 01 மற்றும் 02 அட்டவணைகள் திருத்தப்படல் வேண்டும். அதன்படி, மேற்குறித்த 03/2024 சுற்றறிக்கையின் 01 மற்றும் 02 அட்டவணைகள் நீக்கப்பட்டு, இத்துடன் இணைக்கப்பட்ட 01 மற்றும் 02 ஆம் திருத்தப்பட்ட அட்டவணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

03. இதற்கு மேலதிகமாக, 03/2024 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 01.1, 01.2 மற்றும் 03.4 ஆகிய பந்திகள் பின்வருமாறு திருத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்கு ஏற்புடையதாகுதல் வேண்டும்.

***01.1 வழங்கல் மற்றும் சேவைச் செலவினம்***

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு, 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட அட்டவணை 01 இல் உள்ள வாக்குப் பதிவுக் கணக்கு விவரங்களின் கீழ் மீதமுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, புதிய அமைச்சுக்கள் 2024 ஆம் ஆண்டின் வரவிருக்கும் காலப்பகுதியில் தங்கள் செலவினங்களை நிர்வகித்தல் வேண்டும். இந்தப் பின்னணியில், வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2024 இன் பந்தி 01 இன் பிற ஏற்பாடுகள் அதற்கேற்ப பின்பற்றப்பட வேண்டும்.

### *01.2. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்*

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் புதிய அமைச்சகங்களுக்கான மாற்றல் பற்றிய விவரங்களைக் கொண்ட திருத்தப்பட்ட அட்டவணை 02 இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2024 இன் பந்தி 01.2 இலுள்ள பிற அறிவுறுத்தல்கள் 2024 ஆம் ஆண்டின் வரவிருக்கும் காலகட்டத்தில் கடன்களை வழங்குவதில் மாறாமல் இருக்கும்.

### *03.4. வருடாந்திர நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பொறுப்பு*

#### *அமைச்சுக்கள்*

பொது திறைசேரியானது, 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை அமைச்சுகளுக்கு மத்தியில் ஆய்வு செய்து, 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்புடன் அமைச்சுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென தீர்மானித்துள்ளதுடன் தொடர்புடைய தகவல்கள் அட்டவணை 02 இல் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, அட்டவணை 02 இன் பந்தி (1) இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள், அதன் நிரல் (2) பட்டியலிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவினத் தலைப்புகள் தொடர்பாக 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கும் பொறுப்புடன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பாக, மேற்கண்ட பணியைச் செயற்படுத்துவதற்கும், அதை பிரதான கணக்கீட்டு அலுவலர'களிடம் சமர்ப்பிக்கவும் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க, அந்தந்த செலவினத் தலைப்புகளுக்கான வருடாந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்புடைய முன்னாள் அமைச்சின் பிரதான நிதி அலுவலர் / பிரதான கணக்காளரின் முக்கியப் பொறுப்பாகும்.

#### *திணைக்களங்கள்*

குறித்த திணைக்களத்துக்குரிய அமைச்சில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தாலும், திணைக்களங்களின் செலவினத் தலைப்பு இலக்கங்கள் மற்றும் விடயங்கள் மாறாமல் இருப்பதால், திணைக்களங்களின் கணக்கீடு முந்தைய செலவினத் தலைப்புகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலராக, தற்போது திணைக்களம் இணைக்கப்பட்டுள்ள அமைச்சின் செயலாளர் இருப்பார்.

#### *முற்பணக் கணக்குகளுக்கான வருடாந்த கணக்கிணக்க கூற்றுகள்*

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணக் கணக்குகள் புதிய அமைச்சுக்களுக்கு மாற்றப்படும் விதம் அட்டவணை 02 இன் நெடுவரிசை (3) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, நீக்கப்பட்ட அமைச்சுக்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான வருடாந்த கணக்கிணக்கக் கூற்றுகள் 2024 இனை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கும் பொறுப்பு புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பிரதம நிதி அலுவலர்களுக்கு மேலும் ஒதுக்கப்பட்டுள்ளது. வருடாந்த கணக்கிணக்க கூற்றுக்கள் 2024 தயாரிப்பதற்கான பொறுப்பு, முன்னாள் அமைச்சுக்களின் பிரதம நிதி அலுவலர்கள் / பிரதம கணக்காளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**04. காசேட்டினை மூடுதல் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தல்**

2024.11.04 ஆந் திகதிய 06/2020 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, 2024 ஆம் ஆண்டிற்கான 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி 03/2024 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் கீழ் கட்டுநிதி விடுவிக்கப்படுவதால், நிதியாண்டின் இறுதியில் காசேடுகள் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**05.** 03/2024 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கையின் 02, 03.1, 03.2, 03.3 மற்றும் 04 ஆகிய பந்திகள் தொடர்ந்தும் ஏற்புடையதாக இருக்கும்.

இந்த சுற்றறிக்கை தொடர்பான மேலதிக விளக்கங்களை தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி எம். அனோமா நந்தனி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 0112-484681)

**ஒப்பம்/-**
**எம்.கே. மஹிந்த சிறிவர்தன**
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :
(i) சனாதிபதியின் செயலாளர்
(ii) பிரதமரின் செயலாளர்
(iii) அமைச்சரவையின் செயலாளர்
(iv) கணக்காய்வாளர் நாயகம்